TAMILTH Salem 1 Regional_02 225449 HT187295



### பவானி செல்லியாண்டி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தையொட்டி

# ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தக்குட ஊர்வலம்

■ ஈரோடு

பவானி செல்லியாண்டி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழாவை ஒட்டி, ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவிரி ஆற்றில் புனித நீராடி, தீர்த்தக்குடம் எடுத்துக் கொண்டு ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர்.

ஈரோடு மாவட்டம் பவானி செல்லியாண்டி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் வரும் 8-ம் தேதி நடக்கவுள்ளது. இதையொட்டி யாக கால பூஜைகள் தொடங்கி விமரிசையாக நடக்கிறது.

இந்நிலையில் பவானி சுற்று வட்டாரத்தைச் சேந்த ஆயிரக் கணக்கான பக்தர்கள் நேற்று காலை பவானி கூடுதுறையில் குவிந்தனர். பவானி கூடுதுறை காவிரியில் புனித நீராடிய அவர்கள், காவிரியில் இருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டு, மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக புறப்பட்டனர்.

கூடுதுறையில் தொடங்கிய தீர்த்தக்குட ஊர்வலம், முக்கிய வீதிகளின் வழியே வந்து செல்லியாண்டி அம்மன் கோயிலை வந்தடைந்தது. பக்தர்கள் தாங்கள் எடுத்து வந்த புனித நீரினை, செல்லியாண்டி அம்மன் உற்சவருக்கு ஊற்றி, அம்மனை வழிபாடு செய்தனர். தீர்த்தக்குட ஊர்வலம் காரணமாக, பவானி நகரில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. பக்தர்களின் வசதிக்காக, கும்பாபிஷேகம் நடக்கும் 8-ம் தேதி வரை போக்குவரத்தில் மாற்றம் செய்யப்படும் என போலீஸார் தெரிவித்தனர்.

● பவானி செல்லியாண்டி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழாவை ஒட்டி, ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவிரி ஆற்றில் புனித நீராடி, தீர்த்தக்குடம் எடுத்துக் கொண்டு ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர். (அடுத்த படம்) சென்னிமலையை அடுத்த எக்கட்டாம்பாளையம் மாரியம்மன் கோயில் பொங்கல் விழாவை ஒட்டி மலர் அலங்காரத்தில் அருள்பாலித்த அம்மன்.

**மாரியம்மன் பொங்கல் விழா**

சென்னிமலையை அடுத்த எக்கட்டாம்பாளையம் மாரியம்மன் கோயில் பொங்கல் விழா கடந்த மாதம் 19-ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. 27-ம் தேதி கோயிலில் கம்பம் நடப்பட்ட நிலையில், கம்பத்திற்கு பக்தர்கள் புனித நீர் ஊற்றி வழிபாடு செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த மாவிளக்கு பூஜையில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.

விழாவின் முக்கிய நிகழ்வான பொங்கல் வைக்கும் நிகழ்வு நேற்று நடந்தது. இந்நிகழ்வில், ஏராளமான பக்தர்கள் பொங்கல் வைத்தும், ஆடு, கோழிகளை பலியிட்டும் மாரியம்மனை வழிபட்டனர். பொங்கல் விழாவை ஒட்டி மலர் அலங்காரத்தில் மாரியம்மன் அருள் பாலித்தார். நேற்று இரவு கம்பம் பிடுங்கப்பட்டு, நொய்யல் ஆற்றில் விடப்பட்டது.

## வியர்க்குதே

**குமாரபாளையம்**

● குமாரபாளையம் துணை மின் நிலையத்தில் வரும் 9-ம் தேதி மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெற உள்ளது. எனவே அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை குமாரபாளையம் நகரம், சின்னப்பநாயக்கன்பாளையம், சடையம்பாளையம், டி.வி.நகர், புள்ளாக்கவுண்டம்பட்டி, அக்ரஹாரம், கத்தேரி, சாமியம்பாளையம், தொட்டிபாளையம், கொடாரபாளையம், தட்டான்குட்டை, எதிர்மேடு, வட்டமலை, கல்லங்காட்டுவலசு, வேமன்காட்டுவலசு, கோட்டைமேடு, மற்றும் வளையக்காரனூர் உள்ளிட்ட பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளது என பள்ளிபாளையம் செயற்பொறியாளர் செல்வம் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: repsalem@hindutamil.co.in


**பொது அறிவிப்பு**

[2016-ஆம் ஆண்டு திவால் நிலை மற்றும் திவால்நிலை பிரிவு எண்.102-ன்கீழ்]

**திரு. G. வெங்கடேஷ்வர ராவ் (M/S. GVR INFRA PROJECTS LIMITED தனிப்பட்ட ஜாமீன்தாரர்)-க்கு கடன் வழங்கியவர்கள் கவனத்திற்கு**

**தொடர்பான விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | தனிப்பட்ட ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி | G. வெங்கடேஷ்வர ராவ், த/பெ. G. செஞ்சலா, வயது 67 வருடங்கள் அஞ்சல் எண்.89, ஹுடா என்கலேவ் RD எண். 70, ஜெர்னலிஸ்ட் காலனி, ஜூபிலி ஹில்ஸ், ஐதராபாத்-500033. |
| 2. | திவால்நிலை தீர்மானம் செயல் முறை தொடங்கும் நாள் | 28.11.2024 |
| 3. | தீர்ப்பளிக்கும் அதிகாரத்தின் உத்தரவு விவரம் | மாண்புமிகு NCLT சென்னை பெஞ்ச் உத்தரவு எண். : IA(IBC)/1433/CHE/2024 IN CP (IB)/51(CHE)/2024 நாள் 28.11.2024 |
| 4. | தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண். | Dr.S.R. ஸ்ரீராம் சேகர் IBBI/IPA-03/IP-N000144/2017-2018/11598 |
| 5. | வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி | எண்.11, பிரயாக் அப்பார்ட்மெண்ட்ஸ், 8-15, காந்தி நகர் முதல் பிரதான சாலை, அடையாறு, சென்னை-600 020. E-mail : **shekhershriraam@gmail.com** |
| 6. | தீர்மான நிபுணரின் கடித பரிமாற்றத்திற்கான முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி | எண்.11, பிரயாக் அப்பார்ட்மெண்ட்ஸ், 8-15, காந்தி நகர் முதல் பிரதான சாலை, அடையாறு, சென்னை-600 020. (லேண்ட்மார்க் : சங்கீதா ஓட்டல் அடுத்து) E-mail : **pi.venkateswara@gmail.com** |
| 7. | உரிமை கோரல்கள் சமர்ப்பிக்கும் கடைசி நாள் | **27.12.2024** |
| 8. | தொடர்புடைய படிவங்கள் | **படிவம் B** Weblink: https://www.ibbi.gov.in/uploads/downloads |

**தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை (கோர்ட்-1),** இதன் மூலம் அறிவிப்புதாவது திரு. G வெங்கடேஷ்வரா ராவ், P-எண்-89, ஹுடா என்கலேவ் RD எண்.70, ஜெர்னலிஸ்ட் காலனி, ஜூபிலி ஹில்ஸ், ஐதராபாத் 500033 (தனிப்பட்ட ஜாமீன்தாரர் M/s. GVR INFRA PROJECTS LIMITED)-ன் திவால் தீர்மான செயல்முறைகள் 28.11.2024 அன்று தொடங்க உத்தரவிட்டுள்ளது.

**திரு. G வெங்கடேஷ்வர ராவ்** அவர்களுக்கு கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரல்களுக்கான ஆதாரங்களை **27.12.2024** அன்று அல்லது அதற்கு முன்பாக வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ள தீர்மான நிபுணர் முகவரியில் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னஞ்சல் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

உரிமை கோரல்கள் பெற தவறான ஆதாரங்களை சமர்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

S.R. ஸ்ரீராம் சேகர்
தீர்மான நிபுணர்

நாள் : 05.12.2024 IBBI பதிவு எண்.: IBBI/IPA-003/IP-N000144/2017-2018/11598
இடம் : சென்னை-600020 AFA. செல்லுபடியாகும் நாள் : 31.12.2025


### சிறை கைதிகளிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த

# சேலம் சிறை நூலகத்துக்கு புத்தகங்கள் அளிக்க புத்தக திருவிழாவில் பெட்டிகள் அமைப்பு

**இதுவரை 78 பேர் 432 புத்தகங்கள் நன்கொடை**

வி.சீனிவாசன்

■ சேலம்

சேலம் புத்தகத் திருவிழாவுக்கு வரும் பொதுமக்கள் மத்திய சிறையில் உள்ள நூலகத்துக்குத் தேவையான புத்தகங்களை நன்கொடையாக வழங்கி கைதிகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

சேலம் மத்திய சிறையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தண்டனை, விசாரணை கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். கைதிகள் பலரும் சிறை நூலகத்திலுள்ள புத்தகங்களை படித்து, நாட்டு நடப்பு, சர்வதேச செய்திகளை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்று வரும் புத்தகத் திருவிழாவில், சேலம் மத்திய சிறை சார்பில் சிறைவாசிகள் படிப்பதற்காக, நூல்களை நன்கொடையாக பெறும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் வினோத் கூறியது:

சேலம் மத்திய சிறையில் அமைக்கப்பட்டு நூலகத்தில் வரலாறு, கதை, கட்டுரை, இலக்கியம், பொது அறிவு என பலதரப்பட்ட புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் புத்தகங்களை வாசிக்கின்றனர். இதன் மூலம் அவர்களின் அறிவு மேம்படவும், சிறையில் இருந்து வெளியே செல்லும் போது, நல்ல ஒழுக்கமும், நேர்மையான முறையில் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்ந்திடவும் ஏதுவாக அமைந்துள்ளது.

சேலம் புத்தகத் திருவிழாவில் இதுவரை 78 பேர் 432 புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். ஏற்கெனவே, சிறையில் உள்ள நூலகத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இடம் பெற்றுள்ள நிலையில், பொதுமக்களும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் நன்கொடையாக வழங்கும் இப்புதிய புத்தகங்கள் கைதிகளின் வாசிப்பு பழக்கத்துக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது, என்றார்.

**'அன்பைத் தேடி' புத்தகம்**

சேலம் புத்தகத் திருவிழாவில் நேற்று தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஒருங்கிணைப்பில், புக்ஸ் ஃபார் சில்ட்ரன் அரங்கில், எழுத்தாளர் ஆதி வள்ளியப்பன் மொழிபெயர்த்த 'அன்பைத் தேடி' என்ற புத்தகத்தை கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி 6-ம் வகுப்பு மாணவர் சர்வேஷ் குமார் வெளியிட, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன துணை முதல்வர் விஜயலட்சுமி சங்கர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சேலம் மாவட்ட தலைவர் செங்கோட்டுவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

**இன்றைய கருத்தரங்கில் இறையன்பு பங்கேற்பு**

சேலம் புத்தகத் திருவிழாவில், இன்று (6– ம் தேதி) மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை முன்னாள் தலைமைச் செயலர் இறையன்பு, 'கச்சிதம் என்பது கதை' என்ற தலைப்பிலும், முனைவர் சுந்தர ஆவுடையப்பன், 'முழுமையை நோக்கி' என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குகின்றனர்.

● சேலம் புத்தகத் திருவிழாவில், சேலம் மத்திய சிறை சார்பில் சிறைவாசிகள் படிப்பதற்காக, நூல்களை நன்கொடையாக பெறும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் புத்தகங்களை நன்கொடையாக வழங்கிய அரசு பள்ளி மாணவர்கள். படம்: எஸ். குரு பிரசாத்

# தெருநாய்களை கட்டுப்படுத்த வலியுறுத்தி பள்ளிபாளையத்தில் கம்யூ. ஆர்ப்பாட்டம்

■ நாமக்கல்

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரியும் தெருநாய்களை கட்டுப்படுத்த வலியுறுத்தி பள்ளிபாளையத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்சியின் ஒன்றியக்குழு உறுப்பினர் ஜி.பெருமாள் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் எம்.லட்சுமணன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில், பள்ளிபாளையம் நகராட்சி, ஆலாம்பாளையம் பேரூராட்சி, கிராம ஊராட்சிகளில் அதிகளவில் தெரு நாய்கள் சுற்றித் திரிகின்றன.

இது பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. எனவே இதனை கட்டுப்படுத்த உள்ளாட்சி அமைப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டன. மாவட்ட குழு உறுப்பினர் ஆர்.ரவி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஈ.கோவிந்தராஜ், எம். நவீன் உள்பட கட்சியின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.


**வரி விளம்பரங்கள்**

**பொது**

**விற்பனை**

**CCTV CAMERA**

எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

AN ISO 9001-2008 COMPANY

ஈஸிடெக் டிஜிட்டல் சொலிசன்ஸ்

இலவச டெமோவிற்கு அழைக்கவும்

74488 88904
95009 30200

www.easytechcctv.com


### சேந்தமங்கலம் அருகே பவித்திரம் புதூர் கிராமத்தில்

# கனமழையால் வாழை மரங்கள் முறிந்து சேதம்

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ஆய்வு**

■ நாமக்கல்

கனமழையால் பவித்திரம் புதூர் கிராமத்தில் 12 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டத்துக்கு உட்பட்ட பவித்திரம் புதூர் தோட்டமுடையான் கிராமத்தில் கணிசமான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஒரு வாரம் பெய்த கனமழையால் அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

இதனை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ச.உமா ஆய்வு செய்தார். அப்போது 12.86 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் சேதமடைந்ததாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். இதையடுத்து சேத மதிப்பை கணக்கிடும்படி வேளாண் துறையினருக்கு ஆட்சியர் உமா உத்தரவிட்டார்.

**நெல், பருத்தி சேதம்**

இதேபோல் சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பட்டத்தையன் குட்டை கிராமத்தில் 10 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட நெல், 12 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பருத்தி உள்ளிட்டவையும் கனமழையால் சேதமடைந்தன. இதனையும் ஆட்சியர் உமா ஆய்வு செய்தார்.

மேலும், அங்குள்ள பெரியகுளம் தடுப்பணை மற்றும் பழையபாளையம் ஏரியில் கனமழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளதால் கரையோர மற்றும் தாழ்வான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஆட்சியர் உமா ஆய்வு செய்தார். அப்போது நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை அளவு, தற்போதைய நீர்வரத்து உள்ளிட்ட விவரங்களை நீர்வள ஆதாரத் துறையினர் ஆட்சியரிடம் தெரிவித்தனர்.

அப்போது பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார். வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பெ.கலைச்செல்வி, துணை இயக்குநர் ப.கவிதா, தோட்டக்கலை துணை இயக்குநர் மா.புவனேஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

● சேந்தமங்கலம் அருகே தோட்டமுடையான் கிராமத்தில் உள்ள விளைநிலங்களில் வாழை மரங்கள் முறிந்து விழுந்து சேதமடைந்ததை மாவட்ட ஆட்சியர் உமா ஆய்வு செய்தார்.

● முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவு தினத்தையொட்டி, சேலத்தில் அதிமுக சார்பில் அமைதி ஊர்வலம் நேற்று நடந்தது. 4 ரோடு பகுதியில் இருந்து அண்ணா பூங்கா முன்பு உள்ள ஜெயலலிதா சிலை வரை ஊர்வலமாக சென்ற அதிமுகவினர். படம்: எஸ்.குரு பிரசாத்


**Edelweiss Asset Reconstruction** எடெல்வீஸ் சொத்து மறுசீரமைப்பு கம்பெனி லிமிடெட் CIN - U67100MH2007PLC174759

பதிவு அலுவலகம் : எடெல்வீஸ் ஹவுஸ், CST சாலையில், கலினா, மும்பை-400098.

**கோரிக்கை அறிவிப்பு**

**பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") விதி 3(1) உடன் படிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பாதுகாப்பு நலன்களை செயல்படுத்துதல் சட்டம், 2002 ("சட்டம்") பிரிவு 13(2)-ன்கீழ்.** கீழே கையொப்பமிட்டுள்ள எடெல்வீஸ் சொத்து மறுசீரமைப்பு கம்பெனி லிமிடெட் ("EARC")-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 2002-ன் நிதிச்சொத்துக்கள் பாதுகாப்புநலன் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டத்தின் அமலாக்கத்தின்படி, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி, 2002-ன்கீழ் பிரிவு 13(12) சட்டத்தின்கீழ் பிரிவு 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே தேதியிட்ட விரிவான 13(2)-ன் கோரிக்கை அறிவிப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. கடன்தாரர்(கள்) குறிப்பிட்ட தொகையைச் செலுத்த அந்தந்த கோரிக்கை அறிவிப்பில், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்கள் மீண்டும் ஒருமுறை கடன்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தந்த பெயர்களுக்கு எதிராக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, மேலும் வட்டியுடன் சேர்த்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இருந்து பணம் செலுத்தும் தேதி வரை அல்லது கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/ எழுத்துகளுடன் படிக்கவும், ஏதேனும், இருந்தால் கடமைப்பட்டவர்கள் EARC-க்கு செயல்படுத்தலாம். கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதற்கான பத்திரமாக, பின்வரும் பாதுகாப்பான சொத்து(கள்) EARC-க்கு முறையே கூறப்பட்ட கடன்தாரர்(கள்) மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்) பெயர்/ கடன் கணக்கு எண் | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை | அறக்கட்டளை மற்றும் வழங்குபவர் விவரம் |
|---|---|---|---|
| 1 | 1) அருண்குமார் (கடன்தாரர்) 2) கீர்தனா தி (இணை கடன்தாரர்) LAN : 21660000230490 | 19.11.2024 & 24.10.2024 தேதியில் ரூ.8,25,620/- (ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து அறுநூற்றி இருபது மட்டும்) | EARC TRUST SC 488 மற்றும் பின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் |

**பாதுகாப்பு சொத்து அட்டவணை சொத்து விவரம்: சொத்து 1 :** சைட் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் Rd, பள்ளிபாளையம் Ard & It, கொக்கராயன்பேட்டை கிராமம் நத்தம், நத்தம் நிலவரி திட்டா பட்டா எண். 795, சர்வே எண். 149/1, பி.எஸ்.எண். 309/20, பரப்பு 1722 1/2 வீட்டு சைட் மற்றும் கட்டிடம். கிழக்கு-மேற்கு இருபக்கமும் 53 அடி, தெற்கு - வடக்கு இருபக்கமும் 32 1/2 அடி. மொத்த பரப்பு 1722 1/2 சதுர அடி அதாவது 160.08 சதுர மீட்டர் வீட்டு சைட் மற்றும் அனைத்து அறைகள், கதவுகள், கதவு பொருத்துதல், மின்சார சர்வீஸ் இணைப்பு, மற்றும் வழக்கமான பாதை, பொது சாலை, பொது உரிமைகள், இதர, சொத்தானது கொக்கராயன்பேட்டை பஞ்சாயத்து எல்லை, கதவு எண். 6/244, 6/244/1, TNEB S.C. எண். 162-004-426. மற்றும் **எல்லைகள்** கிழக்கில் : தெரு, மேற்கில் : மாணிக்கம் மற்றும் மற்றவர்களின் சொத்து, வடக்கில் : சின்னப்பன் சொத்து, மாணிக்கம் மற்றும் மற்றவர்களின் சொத்து, தெற்கில் : விற்பனையாளரின் மீதமுள்ள சொத்து, பொது பாதை, கணேசன் சொத்து.

| | | | |
|---|---|---|---|
| 2 | 1) முனியப்பன் சுப்பிரமணி (கடன்தாரர்) 2) ஜோதி பூவன் (இணை கடன்தாரர்), 3) சுப்பிரமணி சின்னசாமி (இணை-கடன்தாரர்) LAN : 18660000137895 | 19.11.2024 & 24.10.2024 தேதியில் ரூ.3,43,543/- (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து ஐநூற்றி நாற்பத்தி மூன்று மட்டும்) | EARC TRUST SC 488 மற்றும் பின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் |

**பாதுகாப்பு சொத்து அட்டவணை சொத்து விவரம்: சொத்து 1 :** சைட் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், சர்வே எண். 12/6E, சௌதாஹள்ளி கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா மற்றும் மாவட்டத்திற்குட்பட்டது, அளவுகள் 5 சென்ட் அத்துடன் தற்போது மற்றும் எதிர்கால கட்டுமானம் உட்பட. மற்றும் **எல்லைகள்** கிழக்கில் : சேட்டு அவர்களின் பங்கு, மேற்கில் : திரு. கோவிந்தராஜ் அவர்களின் பங்கு, வடக்கில் : திரு. J. முருகன் அவர்களின் பங்கு, தெற்கில் : திரு. ராஜா அவர்களின் பங்கு.

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் EARC க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், EARC மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின்கீழ், மேற்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மீது செலவுகள் மற்றும் விளைவுகள் தொடரப்படும். மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் விற்பனை குத்தகை அல்லது வேறு வழியில் EARC முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மேற்குறிப்பிட்ட சொத்துக்களை மாற்ற சட்டத்தின்கீழ் தடை செய்யப்படுகிறது. வேறு எந்த நபர்களோ அந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாக அல்லது அதனை தூண்டும் விதமாக செயல்பட்டால் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விதிகளின்கீழ் சிறை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படும்.

இடம் : மும்பை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நாள் : 06.12.2024 எடெல்வீஸ் சொத்து மறுசீரமைப்பு கம்பெனி லிமிடெட்-க்காக



**ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்**
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் முகவரி : எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

**மின்-ஏலம் அறிவிப்பு**

**2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.**

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன் கணக்கு எண். | உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | 13-2 அறிவிப்பு நாள் | சுவாதீன நாள் | 04.12.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை | சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம் | ரிசர்வ் தொகை INR-ல் | முன்வைப்பு தொகை (EMD) INR-ல் | மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் | ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 30459440000319 | 1) திரு. ரமேஷ், உரிமையாளர் M/s. Ramesh Power Loom, 2) திரு. முனியப்பன், 3) திருமதி. பழனியம்மாள், 4) திரு. கார்த்திக் | 13-03-2024 | 28-10-2024 | ரூ.4,62,377.40 (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து முன்னூற்றி எழுபத்தி ஏழு மற்றும் பைசா நாற்பது மட்டும்) | 24.12.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.7,06,800/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) | ரூ.70,700/- (ரூபாய் எழுபதாயிரத்து எழுநூறு மட்டும்) | 07.01.2025 நேரம்: 03.00 PM | 06.01.2025, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.259/4/ 129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016. |

**அட்டவணை சொத்து :** அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், தமிழ்நாடு, சேலம் மாவட்டம், சேலம் மேற்கு Rd, தாராமங்களம் சார் Rd, பெரியசூரகை கிராமம், மேட்டூர் தாலுகா, பழைய சர்வே எண். 240/15பி, பட்டா எண்.2292-ன்படி புதிய சர்வே எண். 240/15பி2 தொடர்பான நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பின்வரும் **எல்லைகள் : கிழக்கே :** முனியப்பன் அவர்களின் மீதமுள்ள சொத்து, **மேற்கே :** சாலை, **தெற்கே :** செல்வம் அவர்களின் சொத்து, **வடக்கே :** முனியப்பன் அவர்களின் சொத்து. அளவுகள் மொத்தம் 0.03 சென்ட் (1308 சதுர அடி) முழு நிலம் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள்.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்